**செய்தி வெளியீடு எண்: 638** **நாள்: 21.10.2012**

<u>செய்தி வெளியீடு</u>

மக்கள் அச்சமின்றி, பாதுகாப்புடன் வாழ தமிழக காவல்துறையினர் அயராது பாடுபட்டு வருகின்றனர். நாட்டில் அமைதி சூழ்நிலையை ஏற்படுத்த பாடுபடுகின்ற காவல் துறையினரது பணிகள் சிறக்க, அவர்களுக்கு உத்வேகம் அளிக்கும் வகையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் பல்வேறு சலுகைகளை அவர்களுக்கு வழங்கி வருகிறார்கள்.

இதன் அடிப்படையில், தமிழ்நாடு காவல்துறையில் உள்ள சிறப்பு காவல்படை மற்றும் ஆயுதப்படை வளாகங்களில் குடியிருக்கும் காவலர்களின் நலன்களை பேணி பாதுகாக்கும் வகையில் 2,055 ஈரடுக்குப் படுக்கைகள் மற்றும் 4,110 பருத்தி மெத்தைகள், தலையணைகள், படுக்கை விரிப்புகள் மற்றும் தலையணை உறைகளை 3 கோடி ரூபாய் செலவில் வழங்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

காவல் துறை பணியாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்கு வழங்கப்படும் சீருடைப்படியினை 200 ரூபாயிலிருந்து 250 ரூபாயாக உயர்த்தி வழங்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இந்த சீருடைப்படி உயர்வின் மூலம், இரண்டாம் நிலைக் காவலர்கள் முதல் இந்திய காவல் பணியைச் சாராத காவல் கண்காணிப்பாளர்கள் வரையுள்ள 96,399 பேர் பயன் அடைவார்கள். இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு 5 கோடியே 78 லட்சத்து 39 ஆயிரத்து 400 ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும்.

இதே போன்று சிறைத் துறையில் பணிபுரியும் களப் பணியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் சிறைத் துறையில் உள்ள களப் பணியாளர்களுள் முதல் நிலைக் காவலர், தலைமைக் காவலர், உதவி சிறை அலுவலர் ஆகிய நிலைகளில் உள்ள பணியாளர்களின் எண்ணிக்கை, அப்பதவிகளின், கீழ் நிலையில் உள்ள பணியிடங்களின் எண்ணிக்கையில் பாதியாக இருக்கும் வகையில் 1,116 இரண்டாம் நிலை காவலர் பணியிடங்களை ஒப்புவித்து, புதியதாக 672 முதல் நிலைக் காவலர் பணியிடங்கள், 349 முதல் தலைமை காவலர் பணியிடங்கள் மற்றும் 95 உதவி சிறை அலுவலர் பணியிடங்கள் என மொத்தம் 1,116 பணியிடங்களை தோற்றுவித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதன் மூலம் 2,232 சிறைத்துறைப் பணியாளர்கள் பதவி உயர்வு பெறுவர். இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு 2 கோடியே 7 லட்சம் ரூபாய் செலவினம் ஏற்படும்.

இது மட்டுமல்லாமல், காவல் துறையினருக்கு வழங்கும் சலுகைகள், சிறைத்துறையினருக்கும் வழங்கப்பட வேண்டும் என்பதன் அடிப்படையில், காவல்துறையினருக்காக திறக்கப்பட்ட பல்பொருள் அங்காடியை சிறைத்துறையினர் பயன்படுத்திக் கொள்ளவும், காவல் துறையினருக்கு நிகராக இடர்படி மற்றும் குழுக்காப்பீடு

ஆகியவற்றை சிறைத்துறையினருக்கும் ஏற்கெனவே உயர்த்தி வழங்கியுள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தற்போது, காவல்துறை பணியாளர்களுக்கு வழங்கியது போல், சிறைத்துறை பணியாளர்களுக்கும், சலவைப்படியை 200 ரூபாயிலிருந்து 250 ரூபாயாக உயர்த்தி வழங்கிட உத்தரவிட்டுள்ளார்கள். இதன் மூலம் 3,455 சிறைத்துறை பணியாளர்கள் பயன் பெறுவர். இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு 20 லட்சத்து 73 ஆயிரம் ரூபாய் தொடர் செலவினம் ஏற்படும்.

அரசின் இந்த நடவடிக்கைகள் காவல்துறை மற்றும் சிறைத்துறை பணியாளர்களின் பணிகள் மேலும் சிறக்க வழிவகுக்கும்.

*******

வெளியீடு:- இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9.
நாள்:- 21.10.2012.